முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலினை சென்னை மாநகராட்சி காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எஸ்.திரவியம் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## 4 ஆண் நண்பர்களுடன் சேர்ந்து தாக்குதல்:

# காதலனை கொடைக்கானல் வீட்டில் கொடூரமாக கொன்ற சென்னை ஆசிரியை

## வெந்நீர் ஊற்றி, உருட்டுக்கட்டையால் அடித்து துவம்சம் செய்ததாக பரபரப்பு வாக்குமூலம்

கைதான ஸ்வேதா

கொலை செய்யப்பட்ட சூர்யா

கைதான ஸ்வேதாவின் நண்பர்களை படத்தில் காணலாம்.

சென்னை, டிச.3—

சென்னை கொட்டிவாக்கம் வெங்கடேஸ்வரா நகரை சேர்ந்தவர் இளம் பெண் ஸ்வேதா. யோகா ஆசிரியையான இவருக்கும் தென்காசி சாந்தி நகரை சேர்ந்த சூர்யா என்ற வாலிபருக்கும் இடையே காதல் ஏற்பட்டது.

சூர்யா சென்னையில் தங்கி இருந்து பிலிம்டெக்னாலஜி தொடர்பாக இசை கம்போசிங் படிப்பை படித்த போது இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதை தொடர்ந்து ஸ்வேதா—சூர்யா இருவரும் திருமணம் செய்யாமலேயே கணவன் —மனைவி போல வாழ்ந்து வந்தனர். இவர்களது காதலில் கடந்த 6 மாதத்துக்கு முன்பு திடீரென விரிசல் ஏற்பட்டது.

**ஊடல்—கூடல்**

இதனால் ஏற்பட்ட ஊடலால் காதலர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் சில நாட்களுக்கு முன்பு இருவரும் சமாதானமாக மீண்டும் ஒன்று சேர்ந்து கூடலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் 'லிவ்விங் டு கெதர்' வாழ்க்கையை இருவரும் சந்தோஷமாக மீண்டும் தொடங்கினர். இதன் மூலம் கடந்த ஓராண்டுக்கு முன்பு தொடங்கிய இருவரது காதல் பயணமும் மீண்டும ஜெட் வேகத்தில் பயணிக்க தொடங்கியது.

**கொடைக்கானலில்**

இந்த நிலையில் சூர்யா, கொடைக்கானலில் காட்டேஜ் ஒன்றை கட்டுவதற்கு திட்டமிட்டார். இதற்காக அங்குள்ள பாம்பர்புரம் பகுதியில் காட்டேஜ் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கி இருந்தார்.

இதையடுத்து சென்னையில் இருந்து யோகா ஆசிரியையான ஸ்வேதா புறப்பட்டு கொடைக்கானல் சென்று காட்டேஜ் வீட்டில் தங்கினார். பகலில் இருவரும் ஒன்றாக வெளியில் சென்றுவிட்டு இரவில் காட்டேஜ்க்கு வந்து தங்குவதை வழக்கமாக வைத்திருந்தனர். இந்த நிலையில் இரவில் காட்டேஜ் திரும்பிய சூர்யா—ஸ்வேதா இருவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டனர்.

**திடீர் மோதல்**

அப்போது இருவருக்கும் இடையே திடீரென தகராறு ஏற்பட்டது. சூர்யா, பிரிந்து சென்ற சம்பவத்தை சுட்டிக்காட்டி ஸ்வேதாவை அடித்துள்ளார். இதன் பின்னர் இது மிகப் பெரிய மோதலாக வெடித்தது. இருவரும் மாறி மாறி தாக்கி கொண்டனர். அப்போது ஸ்வேதா, சூரியா மீது வெந்நீரை எடுத்து ஊற்றி கழுத்தை நெரித்து உள்ளார். அப்போது ஸ்வேதா தனது நண்பர்களுக்கு போன் செய்துநடந்த சம்பவத்தை கூறினார். இதையடுத்து நண்பர்கள் 4 பேர் அங்கு வந்துள்ளனர்.

**அடித்துக் கொலை**

அப்போதும் சூரியா, ஸ்வேதாவை அடிக்க பாய்ந்துள்ளார். இதனால் நண்பர்கள் உருட்டுக் கட்டையால் தாக்கியும் காலால் எட்டி உதைத்தும் சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் சூர்யாவுக்கு பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே அவர் துடி துடித்து பலியானார்.

இதனால் பயந்து போன ஸ்வேதா மற்றும் அவரது ஆண் நண்பர்களும் கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரிக்கு உடலை சிகிச்சைக்கு எடுத்து செல்வது போல காரில் தூக்கி சென்று கொண்டு போட்டு விட்டு தப்பி விட்டனர்.

**கைது**

இது பற்றி தகவல் கிடைத்ததும் கொடைக் கானல் டவுன் போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். பின்னர் தப்பி ஓடி தலைமறைவான யோகா ஆசிரியை ஸ்வே தாவையும், அவரது ஆண் நண்பர்கள் 4 பேரையும் அதிரடியாக சுற்றி வளைத்து கைது செய்தனர். கொலை வழக்கில் ஸ்வேதா முதல் குற்றவாளியாக சேர்க்கப் பட்டுள்ளார்.

அவரது நண்பர்களான கவுதம், பராந்தகசோழன், அகில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் அடுத்தடுத்து குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டு உள்ளனர். கைதான 5 பேரையும் போலீசார் கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

**பல இடங்களில் காயம்**

இவர்கள் வெந்நீரை ஊற்றி கடுமையாக தாக்கியதில் சூர்யாவுக்கு உடலில் பல இடங்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன. தலை, நெற்றி, கண் ஆகிய இடங்களில் ரத்தக் காயங்கள் ஏற்பட்டிருந்தன. இடது கையில் வெந்நீர் பட்டதில் தோல் உரிந்து காணப் பட்டது.

மேல் உதட்டில் காயம் ஏற்பட்டிருந்ததுடன், இடது பக்க கழுத்தில் கீரல் காயங்களும் இருந்தன. பிரேத பரிசோதனைக்கு பின்னர் சூர்யாவின் உடலை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

கொலையாளி ஸ்வேதா, காதலன் சூர்யாவை துவம்சம் செய்து துடிக்க, துடிக்க கொன்றது தொடர் பாக பரபரப்பான வாக்கு மூலம் அளித்து உள்ளார். அதன் விவரம் வருமாறு:—

**பாலியல் உறவு**

எனக்கும் சூர்யாவுக்கும் இடையே கடந்த ஓராண்டாக காதல் இருந்து வந்தது. இருவரும் திருமணம் செய்யாமலேயே கணவன் —மனைவியாக வாழ்ந்து வந்தோம். இருவரும் பல முறை பாலியல் ரீதியாக உறவு கொண்டு உள்ளோம். அப்போது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சூர்யா துன்புறுத்தினார்.

இதனால் சில மாதங்கள் சூர்யாவை பிரிந்து பேசாமல் இருந்தேன். இதன் பின்னர் மீண்டும் எங்களுக்கு இடையே பழக்கம் ஏற்பட்டது. சூர்யா கொடைக்கானலில் தங்கி இருந்தது தெரிந்து நானும் அங்கு சென்றேன். அங்கு நாங்கள் ஒன்றாக ஊர் சுற்றினோம். உல்லாசமாகவும் இருந்து உள்ளோம். இந்த நிலையில் தான் எனக்கும் சூர்யாவுக்கும் பிரச்சினை ஏற்பட்டு என்னை சரமாரியாக அடித்தார்.

**நண்பர்களை வரவழைத்தேன்**

இதை தொடர்ந்து கொடைக்கானலில் உள்ள எனது நண்பர்களான கவுதம், பராந்தக சோழன், அகில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோருக்கு போன் செய்து வர சொன்னேன். சூர்யா தாக்கியதில் எனக்கு ஏற்பட்ட காயத்தை பார்த்து அவர்கள் ஆத்திரம் அடைந்தனர். இந்த நேரத்தில் சூர்யா என்னை மீண்டும் தாக்க முற்பட்டார். இதனால் கோபம் அடைந்த கவுதம் அருகில் கிடந்த கட்டையை தூக்கி சூர்யாவை தலையில் அடித்தான். பராந்தக சோழன், நெஞ்சில் ஓங்கி மிதித்து கீழே தள்ளினான். பினனர் 4 பேரும் சேர்ந்து சூர்யாவின் முகம் மறறும் உடம்பில் மாறி, மாறி மிதித்தனர். இதில் மயக்க நிலைக்கு சென்ற சூர்யாவை காட்டேஜ்லேயே போட்டு விட்டு செத்தால் சாகட்டும் என்று நினைத்து நாங்கள் அங்கிருந்து தப்பினோம்.

**பயந்து போய்**

இதன் பிறகு எங்களுக்கு பயம் ஏற்பட்டு திரும்பி வந்து ஒரு காரில் சூர்யாவை தூக்கி போட்டுக் கொண்டு கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்றோம். அங்கு மாடிப்படியில் தவறி சூர்யா கீழே விழுந்து விட்டதாக தெரிவித்தோம். அவரது உடலை பரிசோதித்த டாக்டர்கள் சூர்யா ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதனால் அங்கிருந்து தப்பி ஓடி விட்டோம்.

இவ்வாறு ஸ்வேதா வாக்குமூலம் அளித்து உள்ளார்.

இக்கொலை சம்பவம் கொடைக்கானல் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சென்னை கொட்டிவாக்கம் வெங்கடேஸ்வரா நகர் பகுதியிலும் பரபரப்பான பேச்சாக மாறியுள்ளது.

### பழக்கம் ஏற்பட்டது எப்படி?

இந்த வழக்கில் ஸ்வேதாவுடன் மும்பையை சேர்ந்த கவுதம்(31), நெல்லை மேலப் பாளையத்தை சேர்ந்த சுபாஷ்சந்திரபோஸ், (27), கொடைக்கானல் ஆனந்தகிரியை சேர்ந்த பராந்தகசோழன்(21), வாழையாற்று ஓடைப்பகுதியை சேர்ந்த அகில்அமீது(25) ஆகியோர் சிக்கியுள்ளனர். அவர்களி டமிருந்து 2 கார்கள் பறிமுதல் செய்யப்ப ட்டது.

கவுதம் மற்றும் சுபாஷ்சந்திரபோஸ் ஆகியோர் பள்ளிகளுக்கு சீருடை தைக்க துணிகள் வழங்கும் ஆர்டர் எடுத்து வேலை பார்த்து வருகின்றனர். இவர்களுக்கு கூக்கால் பகுதியில் சொந்தமாக பங்களா உள்ளது. மற்ற 2 பேரும் உள்ளூரை சேர்ந்தவர்கள். சூர்யாவை நம்பி சென்னையில் இருந்து கொடைக்கானலுக்கு வந்த ஸ்வேதாவுக்கு இவர்கள் பழக்கம் ஏற்பட்டது எப்படி என்பது பற்றியும் விசாரணை நடந்து வருகிறது.

### கூகுள் மேப் லொக்கேஷன்

சூர்யா கொலை செய்யப்பட்ட காட்டேஜ்—க்கு நண்பர்களை வரவழைக்க தான் இருக்கும் இடத்தில் இருந்து கூகுள் மேப் லொக்கேசனை ஸ்வேதா அனுப்பி இருக்கிறார். அவரது செல்போனில் அதற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன. இதனை கொலை வழக்கில் முக்கிய ஆதாரமாக போலீசார் சேர்த்துள்ளனர்.

# மாதவரத்தில் லாரி மோதி வங்கி மேலாளர் பலி

விவேக் சுகுமார்

கொளத்தூர், டிச.3—

மாதவரம் அடுத்த விளாங்காடுபாக்கம் நியூ ஸ்டார் சிட்டியை சேர்ந்தவர் விவேக் சுகுமார் (வயது 41) இவர் சென்னை ஆர். கே. சாலையில் உள்ள தனியார் வங்கியில் மேலாளராக வேலை செய்து வந்தார். நேற்று மாலை வேலை முடித்துவிட்டு இரு சக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்று கொண்டு இருந்தார். அப்போது இவரது பின்னால் இருந்து வந்த டிப்பர் லாரி மோதியதில் பலத்த காயம் ஏற்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போக்கு வரத்து புலனாய்வு பிரிவு போலீசார் அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த னர். அங்கு சிகிச்சை பல னின்றி நேற்று இரவு 8 மணிக்கு உயிரிழந்தார். இது குறித்து மாதவரம் போக்குவரத்து புலனாய்வு இன்ஸ்பெக்டர் அகமது அப்துல் காதர் வழக்கு பதிவு செய்து விபத்துக்கு காரணமான லாரி டிரைவர் துரைப்பாக் கத்தைச் சேர்ந்த சீனிவாசன் என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

### ஜீ தமிழில் கார்த்திகேயா 2

ஜீ தமிழ் தொலைகாட்சியில் டிசம்பர் 4–ந்தேதி மதியம் ஒரு மணிக்கு கார்த்திகேயா 2 உலக தொலைக்காட்சி பிரீமியர் திரைப்படம் ஒளிபரப்பாக உள்ளது. இந்த படத்தில் நிகில் சித்தார்த்தா, அனுபமா பரமேஸ்வரன், அனுபம் கேர், ஹர்ஷா செமுடு மற்றும் ஆதித்யா மேனன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர், டைரக்டர் சந்து மொண்டேடி இயக்கிய இந்த திரைப்படம் நிச்சயமாக உங்களை இருக்கையின் நுனியில் வைத்திருக்கும்.

### கோயம்பேடு மார்க்கெட்டில்

# பீன்ஸ் விலை கடும் வீழ்ச்சி; கிலோ ரூ.10-க்கு விற்பனை

போரூர், டிச.3—

சென்னை கோயம்பேடு காய்கறி மார்கெட்டுக்கு ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இருந்து பீன்ஸ் விற்பனைக்கு வருகிறது.

தினசரி 800 முதல் 900 மூட்டைகளில் மட்டுமே பீன்ஸ் விற்பனைக்கு வருவது வழக்கம். ஆனால் கடந்த ஒரு வாரமாக அதன் வரத்து 2 மடங்காக அதிகரித்தது. இதன் காரணமாக பீன்ஸ் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை மொத்த விற்பனையில் ஒரு கிலோ பீன்ஸ் ரூ20—க்கு விற்கப் பட்டது.

இந்த நிலையில் இதுவரை இல்லாத அளவுக்கு இன்று 2ஆயிரம் மூட்டைகளில் பீன்ஸ் விற்பனைக்கு குவிந்துள்ளது. இதன் காரணமாக இன்று மொத்த விற்பனை கடைகளில் பீன்ஸ் விலை மேலும் வீழ்ச்சி அடைந்து ஒரு கிலோ ரூ10—க்கு விற்கப்படுகிறது. ஆனால் அதையும் வாங்கி செல்ல சில்லரை வியாபாரி கள் யாரும் ஆர்வம் காட்டவில்லை. இதனால் மூட்டை மூட்டையாக பீன்ஸ் தேக்கமடைந்து இருப்பது மொத்த வியாபாரிகளை பெரிதும் கவலை அடைய செய்துள்ளது.

### கூட்டம் சேர்க்க வெள்ளிக்காசுகளை வாரி இறைக்கிறார்கள்

# நம் பலத்தை காட்ட லட்சக்கணக்கில் ஜெயலலிதா நினைவிடம் நோக்கி வாருங்கள்

## தொண்டர்களுக்கு ஓ.பன்னீர்செல்வம் அழைப்பு

ஓ.பன்னீர்செல்வம் ஜெயலலிதா நினைவு நாள் குறித்து மாவட்ட செயலாளர் களுடன் ஆலோசனை நடத்தினார்.

சென்னை, டிச. 3—

மறைந்த முன்னாள் முதல்—அமைச்சர் ஜெய லலிதாவின் நினைவுநாள் அமைதி பேரணியை பிரம்மாண்டமாக நடத்து வது குறித்து மாவட்ட செய லாளர்களுடன் கலந்துரை யாடல் கூட்டம் நேற்று நடைபெற்றது.

அ.தி.மு.க. ஒருங்கி ணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் சென்னை கீரின்வேஸ் சாலையில் உள்ள முன்னாள் முதல்—அமைச்சர் ஓபிஎஸ் இல்லத்தில் நேற்று நடை பெற்ற ஆலோசனை கூட்டத்தில் அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் வைத்திலிங்கம், துணை ஒருங்கிணைப்பாளர்கள் கு.ப.கிருஷ்ணன், ஜேசிடி பிரபாகர் அமைப்பு செய லாளர் நாஞ்சில் கோலப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**அமைதி பேரணி**

இந்த நிகழ்ச்சியில் பேசிய அ.தி.மு.க. ஒருங்கிணைப்பா ளர் ஓ.பன்னீர்செல்வம், வரும் டிசம்பர் 5—ந்தேதி மறைந்த முன்னாள் முதல்—அமைச்சர் ஜெயலலிதாவின் 6—ம் ஆண்டு நினைவை போற்றும் வகையில் அமைதி பேரணியும் உறுதி யேற்பு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

கழக தொண்டர்களும் மக்களும் நம் பக்கம் தான் என்பது உறுதியாக இருந்தாலும் அதை நிரூபிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. வருகிற 5—ந்தேதி காலை 9 மணிக்கு ஜெயலலிதாவின் நினைவை போற்றும் வகையில் நடைபெறும் அமைதி பேரணியில் ஆயிர மாயிரமாய் திரண்டு வர வேண்டும். கழகமும் மக்க ளும் நம் பக்கம் தான் என்பதை மக்கள் மன்றத்திற்கு உணர்த்த வேண்டும்.லட்சக்கணக்கில் அணி திரண்டு வருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஒரு கூட்டம் வெள்ளிக் காசுகளை அள்ளி இறைத் துக்கொண்டிருக்கிறது. நாம் மட்டும் தான் அமைதியாக செயல்பட்டு, அனைத்து வகையிலும் வெற்றி வாய்ப்பை வெல்லப்போகி றோம் அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர்கள் வி.என். பி.வெங்கட்ராமன், பி.வைரமுத்து, மகிழன்பன், ரெட்சன் அம்பிகாபதி, ரஞ்சித்குமார், எம் எம் பாபு கிருஷ்ணன், ஜேகே ரமேஷ், பி.எஸ்.சிவா,சதீஷ், அச்சுதன், அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் குருமோகன், இளைஞரணி செயலாளர் வி.ஆர். ராஜ மோகன், இளைஞரணி இணைச்செயலாளர் ஜூனியர் எம் ஜி ஆர், மீனவர் அணி செயலாளர் கோசு மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட செயலாளர் ஆர்.டி. ராமச்சந்திரன், கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் சுந்தரராஜன், சிவகங்கை கிருஷ்ணகிரி மாவட்டங்கள் சேர்ந்த புதிய நிர்வாகிகள் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### சட்ட பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில், 12–வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த பட்டமளிப்பு விழாவில், மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ முனைவர் பட்டத்தை, டாக்டர் எம்.ஜி.ஆர்., ஜானகி மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தலைவர் குமார் ராஜேந்திரனுக்கு வழங்கினார். அருகில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் (முனைவர்) என்.எஸ். சந்தோஷ் குமார் ஆகியோர் உள்ளனர்.

### நாராயண பள்ளி வினாடி வினா

நாராயண பள்ளி குழுமம் சார்பாக வினாடி வினா போட்டி எஸ்.வி.வி கன்வென்ஷனல் ஹால், சென்னை பூந்தமல்லியில் நடைபெற்றது. இந்த வினாடி வினாவில் பிரம்மாண்டமான இறுதி சுற்றினை குவிஸ் மாஸ்டர் வினை முதலியார் தொகுத்து வழங்கினார். இறுதி போட்டிகளில் பல புதுமையான சுற்றுகள் மற்றும் பல விறுவிறுப்பான விளையாட்டு சுற்றுகளும் இருந்தன. பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு அறிவூட்டும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது. மாணவர்களை ஊக்குவிக்க பரிசுகள், சான்றிதழ்கள், பண முடிப்புகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி சமூக ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பானது.

### கண்புற்று நோய் அறுவை சிகிச்சை




மருத்துவ வரலாற்றிலேயே மிக அரிதினும் அரிய நோயாக கருதப்படும் கண் புற்று நோய் கட்டி சங்கரா மருத்துவமனையில் கண்டறியப்பட்டு வெற்றிகரமான அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்பட்டுள்ளது. 5 மாத குழந்தைக்கு இந்நோய் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சங்கரா கண் மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் ஸ்ருதி தாரா, இந்த குழந்தைக்கு உரிய நேரத்தில் அறுவை சிகிச்சையை மேற்கொண்டார். அதிநவீன மருத்துவ நுட்பம் மிகவும் வெற்றிகரமாக இந்த அறுவை சிகிச்சையை மேற்கொள்ள உதவியது. 'ரோஹன் வெற்றிகரமாக புற்றுநோயை எதிர்த்து போராடி வெற்றி பெற்றுள்ளான்' என்று கூறினார்.


**கன்சாலிடேட் கன்ஸ்ட்ரக்ஷன் கன்சோர்டியம் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 8/33, பத்மாவதியார் சாலை, ஜெய்பூர் காலனி, கோபாலபுரம், சென்னை – 600 086. மின்னஞ்சல் : secl@ccclindia.com

போன்: 044–2345 4514 | CIN : L45201TN1997PLC038610

**பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

நிறுவனத்தின் 25வது பொதுக்குழுவை கூட்டுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சாதாரண மற்றும் சிறப்பு வணிகங்களை பரிவர்த்தனை செய்ய கன்சாலிடேட் கன்ஸ்ட்ரக்ஷன் கன்சோர்டியம் லிமிடெட்டின் 25வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) 27 டிசம்பர், 2022 செவ்வாய் அன்று பிற்பகல் 02.45 மணிக்கு ஹோட்டல் கோகுலம் பார்க் சபரி, எண்.33, ராஜீவ் காந்தி சாலை (OMR), நாவலூர், சென்னை – 603103–ல் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

விளக்க அறிக்கையுடன், வருடாந்திர அறிக்கை 2022, பதிலி படிவம் மற்றும் வருகை சீட்டு ஆகியவை தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. நிறுவனம் 02 டிசம்பர், 2022 அன்று மின்னஞ்சல் மூலம் அனைத்து பங்குதாரர்களுக்கும் வருடாந்திர அறிக்கை 2022 உடன் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பும் பணியை நிறைவு செய்துள்ளது.

இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.ccclindia.com இல் உள்ளன என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) திருத்தப்பட்ட விதிகள், 2014–ன் விதி 20 மற்றும் செபி (LODR) ஒழுங்குமுறைகள், 2015–ன் ஒழுங்குமுறை 44 ஆகியவற்றுக்கு இணங்க, 25வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வழிமுறைகள் மற்றும் வணிகம் மூலம் பரிசீலிக்க முன்மொழியப்பட்ட தீர்மானங்களின் மீது வாக்களிக்கும் உரிமையை உறுப்பினர்களுக்கு வழங்குவதில் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது. அவை மெசர்ஸ் கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் வழங்கும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு சேவைகள் மூலம் பரிவர்த்தனை செய்யப்படலாம். பங்குதாரர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்ஆஃப் தேதி அதாவது 21.12.2022 அன்று, நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தின் அவர்களின் பங்கின் விகிதத்தில் இருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு 24.12.2022 (காலை 9.00 மணி) அன்று துவங்கி 26.12.2022 (மாலை 5.00 மணி) அன்று முடிவடைகிறது. கட்ஆஃப் தேதியான அதாவது 21.12.2022 அன்று நிறுவனத்தின் பங்குகளை காகித வடிவில் அல்லது மின்னணு வடிவில் வைத்திருக்கும் பங்குதாரர்கள், இந்தக் காலக்கட்டத்தில் தங்கள் வாக்குகளை தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கலாம். அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்களிப்பு மெசர்ஸ் கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டால் நிறுத்தப்படும். ஒரு தீர்மானத்தின் மீது பங்குதாரரால் வாக்களிக்கப்பட்டவுடன், பங்குதாரர் அதை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

மின்னணு வாக்களிப்பு பற்றிய தகவல் அல்லது ஏதேனும் கேள்விகளுக்கு, அனுப்பப்பட்ட அறிவிப்பின் ஒரு பகுதியாக இருக்கும் தனி மின்னணு வாக்களிப்பு அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பார்க்கவும் அல்லது கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டின் (ஆர்டி) திருமதி சி ஷோபா ஆனந்த் – இணைத் துணைத் தலைவர், தொலைபேசி எண்: 040–67162222, மின்னஞ்சல் முகவரி: Evoting@kfintech.com அல்லது einward.ris@kfintech.com அல்லது திரு. எஸ். எஸ். அருணாசலம், நிறுவனச் செயலாளர், தொலைபேசி எண் 044 – 23454514, மின்னஞ்சல் – secl@ccclindia.com–ல் தொடர்பு கொள்ளலாம்.

அறிவிப்பை அனுப்பிய பிறகு, நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆஃப் தேதியான 21.12.2022 அன்று பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், மின்னஞ்சல் முகவரி https://Evoting.kfintech.com அல்லது நிறுவனத்திற்கு/ஆர்டிஏ–க்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், நீங்கள் ஏற்கனவே மெசர்ஸ் கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டில் தொலைதூர மின்னணு வாக்களிப்புக்காக பதிவு செய்திருந்தால், நீங்கள் வாக்களிக்க ஏற்கனவே உள்ள பயனர் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம். நீங்கள் உங்கள் கடவுச்சொல்லை மறந்துவிட்டால், மின்னணு வாக்களிப்பு இணையதளத்தில் உள்ள வாய்ப்பை பயன்படுத்தி உங்கள் கடவுச்சொல்லை மாற்றிக் கொள்ளலாம் அல்லது மெசர்ஸ் கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டின் கீழ்க்கண்ட தொலைபேசி எண். 040–67162222 தொடர்பு கொள்ளலாம்.

வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதி வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது கிடைக்கும் மற்றும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் வாக்களிக்காமல் இருக்கும்பட்சத்தில், வாக்குச்சீட்டு மூலம் கூட்டத்தில் வாக்களிக்க முடியும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பின்னரும் கூட ஒரு உறுப்பினர் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

கட்ஆஃப் தேதியின்படி, உறுப்பினர் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ பெயர் இடம் பெற்றுள்ள நபர் மட்டுமே, தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதியைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவார்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்குச் சீட்டு மூலமான வாக்களிப்பை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்யும் ஆய்வாளராக திரு. என்.பாலச்சந்திரன், பயிற்சி நிறுவனச் செயலர் (உறுப்பினர் எண் 5113) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்டம் முடிந்த பிறகு முடிவுகள் அறிவிக்கப்படும் மற்றும் அவை ஆய்வாளரின் அறிக்கையுடன் நிறுவனத்தின் இணையதளமான www.ccclindia.com–ல் 29.12.2022 அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவேற்றம் செய்யப்படும் மற்றும் அது குறித்து நிறுவனத்தின் சம பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஸ்டாக் எக்சேஞ்சில் தெரிவிக்கப்படும்.

வருடாந்திர பொதுக் கூட்டத்தையொட்டி, நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 91 மற்றும் செபி (LODR) ஒழுங்குமுறை 2015–ன் ஒழுங்கு முறை 42–ன் கீழ் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் நிறுவனத்தின் பங்குமாற்று புத்தகங்கள் 22 டிசம்பர் 2022 முதல் 27 டிசம்பர் 2022 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள் மற்றும் அதன் விளைவாக வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகிய சேவைகளை பெற முடியாது. எனவே அவர்கள் https://ris.kfintech.com/clientservices/mobilereg/mobileemailreg.aspx என்ற இணைப்பை கிளிக் செய்து தங்களின் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை தற்காலிகமாக பதிவு செய்து அவற்றை பெற்றுக் கொள்ளலாம். உள்நுழைவு முகவரி மற்றும் கடவுச்சொல்லுடன் அறிவிப்பின் மின்னணு நகல் மற்றும் மின்னணு வாக்களிப்பு வழிமுறைகளை அனுப்புவதற்கான மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணைப் பதிவு செய்ய வழிகாட்டப்பட்ட செயல்முறையைப் பின்பற்றுமாறு பங்குதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏதேனும் கேள்விகள் இருப்பின், அது குறித்து பங்குதாரர் எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம்.

குறிப்பு: கூட்டத்தில் கலந்துகொள்ளவும் வாக்களிக்கவும் தகுதியுடைய ஒரு உறுப்பினர், அவருக்குப் பதிலாக வாக்களிக்க ஒரு பதிலியை நியமிப்பதற்கு உரிமையுண்டு. அவர் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. பதிலி படிவம் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டு, கூட்டம் தொடங்குவதற்கு 48 மணிநேரத்திற்கு முன்னதாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

கன்சாலிடேட் கன்ஸ்ட்ரக்ஷன் கன்சோர்டியம் லிமிடெட்

இடம்: சென்னை — கிருஷ்ணசாமி வாசுதேவன்

நாள்: 02.12.2022 — தீர்மானம் நிபுணர்



**தமிழ்நாடு அரசு - நீர் வளத் துறை**

மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர் - 632006.

**மொத்த தொகை ஒப்பந்தப்புள்ளி முறை**

குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்:02 / மேபாவவ / வேலூர் /2022 - 2023/ கோ- டெண்டர்/ நாள்: 02.12.2022.

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் கொண்ட ஒப்பந்தப்புள்ளி மொத்த தொகை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஏரிகள் பழுது பார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் (RRR Scheme) இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள (1) மங்களம் பெரிய ஏரி, (பணியின் மதிப்பு ரூ. 105.93 இலட்சம் ஜி.எஸ்.டி. உட்பட) (2) கனியனூர் பெரிய ஏரி, (பணியின் மதிப்பு ரூ.98.21 இலட்சம் ஜி.எஸ்.டி உட்பட) (3) மாங்காடு ஏரி (பணியின் மதிப்பு ரூ. 82.33 இலட்சம் ஜி.எஸ்.டி உட்பட) (4) சாத்தூர் ஏரி, (பணியின் மதிப்பு ரூ.102.64 இலட்சம் ஜி.எஸ்.டி உட்பட) (5) தாமரைப்பாக்கம் ஏரி, (பணியின் மதிப்பு ரூ.82.19 இலட்சம் ஜி.எஸ்.டி. உட்பட) மற்றும் (6) திமிரி ஏரி (பணியின் மதிப்பு ரூ.107.40 இலட்சம் ஜி.எஸ்.டி. உட்பட) பணிகளுக்காக கண்காணிப்புப் பொறியாளர், நீவது., மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர் - 632006. அவர்களால் 21.12.2022 பிற்பகல் 03.00 மணி வரை தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. இவ்வொப்பந்தப்புள்ளி அதே தேதியில் பிற்பகல் 03.30 மணிக்கு திறக்கப்படும்.

பணியின் விபரம், தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை, கிடைக்குமிடம், ஒப்பந்தப்புள்ளிக்கான தகுதிகள் மற்றும் இதர அனைத்து விவரங்கள் www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செ.ம.தொ.இ / 5349 / ஒப்பந்தப்புள்ளி / 2022 — கண்காணிப்புப் பொறியாளர், நீவது., மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர் - 632 006

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை**

கட்டடம் (க&ப) வட்டம்/ சேப்பாக்கம்/ சென்னை–5

குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.40 கட்டட (க&ப) வட்டம் /2022–2023/நாள். 01.12.2022.

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மொத்த வகை /இன விலை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் சென்னை–5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்ட தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | முன் வைப்புத் தொகை வரவு வைத்துக் கட்ட வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை 28, PSKR சாலையில் அமைந்துள்ள அண்ணா மேலாண்மை நிறுவன வளாகத்தில் உள்ள அனைத்து தொகுதிகளுக்கும் 2 எண்கள் 500 KVA மின் மாற்றிகள் மற்றும் சுவிட்ச் கியர்கள் மூலம் உயர் அழுத்த மின் விநியோகம் ஏற்படுத்துதல் மற்றும் AMF/ATS control panel உடன் கூடிய 2 எண்கள் 250 KVA டீசல் மின் ஆக்கிகள் மூலம் அத்தியாவசிய மின் விநியோகம் ஏற்படுத்தும் பணிகள். மு.வை.தொகை : ரூ. 1,84,500/— | ரூ.348.70 இலட்சங்கள் | 3 மாதங்கள் | செயற் பொறியாளர் (மின்), பொபது., மின் கோட்டம் 2, சென்னை—5. |

ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளங்கள் மூலம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். https://www.tntenders.gov.in (or) http://www.tenders.tn.gov.in மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ரூ.15,000 + ரூ.2,700 (GST). விலைக்கு கீழே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கும்நாள் 08.12.2022 முதல் 15.12.2022 வரை. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறப்படும் கடைசி நாள் 16.12.2022 அன்று ,3.00 மணி வரை. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெறப்படும் நாள் அன்றே மாலை 04.00 மணிக்கு கீழ் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் திறக்கப்படும். ஒப்பந்தக்காரரின் தகுதி மற்றும் இதர விவரங்கள் அனைத்தும் மேற்காணும் இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/5341/ஒப்பந்தப்புள்ளி/2022 — கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (க மற்றும் ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை—5.

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்.”



**உடையார்பாளையம் முதல்நிலை பேரூராட்சி**

அரியலூர் மாவட்டம்

ந.க.எண். 274 / 2022 — **மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்.01.12.2022

உடையார்பாளையம் முதல்நிலை பேரூராட்சியில் 2022–2023ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் பின்வரும் விவரப்படியான வாரச்சந்தை மேம்பாடு அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து (இரு உறை) மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் வரவேற்கப்படுகிறது. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 04.01.2023 புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகைபுரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

| பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி படிவம் சேவை வரி ரூ | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| வார்டு எண்.11 புல எண் 253/3B1&4A–இல் உள்ள வாரச்சந்தை மேம்பாடு செய்தல். | 270.00 | 2,70,000 | 17,700 | 270 நாட்கள் |

• ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 01.12.2022 பிற்பகல் 3.00 மணி முதல் http://tntenders.gov.in/ என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். • முன் வைப்புத் தொகை “செயல் அலுவலர், உடையார்பாளையம் முதல்நிலை பேரூராட்சி” என்ற பெயருக்கு வங்கி வரைவோலை (DD / Banker Cheque) ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். • இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்/—) திருமதி. ர. மலர்விழி, தலைவர், உடையார்பாளையம் பேரூராட்சி — (ஒம்/—) திருமதி. இ. கோமதி, செயல் அலுவலர், உடையார்பாளையம் பேரூராட்சி

செ.மா.தொ.இ./5346/ஒப்பந்தப்புள்ளி/2022 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



**TAMIL NADU VETERINARY AND ANIMAL SCIENCES UNIVERSITY**

'e'Tender Notice

'e'- Tender Notice No. 38/E.O/DB/Tender/2022-2023, dt. 01.12.2022

For and on behalf of the Vice-Chancellor, Tamil Nadu Veterinary and Animal Sciences University 'e'- tenders (Lump sum) are invited by the Estate Officer, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Madhavaram Milk Colony, Chennai-51 online for item wise rate. Bids are invited from the eligible contractors for the following work.

| Sl. No. | Description of work | Approximate value of work (including GST @18%) | EMD (Rs) | Period of completion |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1) | Repair and renovation of Heritage Buildings at Madras Veterinary College, Chennai-07- (a) Department of Clinics, (b) Meat Science (Dr.A.L. Mudaliar Block),(c) Dr. Rathinavelu Prabhakaran Block (Phase-I) | Rs.233.00 Lakhs | 1,26,500/- including GST | Six Months |

Starting and End date for down loading and uploading tender : From 09.12.2022 - 04.00 P.M. to 02.01.2023 - 10.00 A.M.

Last date for submission of bid : 02.01.2023 upto 10.00 A.M.

Opening of Tender : 03.01.2023 at 11.00 A.M.

Pre-Bid Meeting on : 30.12.2022 - 11.00 A.M.

For notice inviting tenders please log on to : www.tanuvas.ac.in / http://tntenders.gov.in The bid forms and other details can be obtained from the website : http://tntenders.gov.in . Subsequent corrigendum / addendum if any shall only be available in website indicated above.

DIPR/5343/TENDER/2022 — சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம். — ESTATE OFFICER,i/c., TANUVAS., CHENNAI



தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு செல்வமுத்துமாரியம்மன் திருக்கோயில்**

செந்தண்ணீர்புரம், திருச்சி கிழக்கு வட்டம், திருச்சி மாவட்டம்

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (முதல் அழைப்பு )**

அம்பாள் சன்னதி மற்றும் ஆர்.சி.சி சுற்று மண்டபம் கட்டுதல் பணி

திருச்சி மாவட்டம், திருச்சி கிழக்கு வட்டம், செந்தண்ணீர்புரம் அருள்மிகு செல்வமுத்துமாரியம்மன் திருக்கோயிலின் அம்பாள் சன்னதி மற்றும் ஆர்.சி.சி சுற்று மண்டபம் கட்டுதல் பணிக்கு, பொதுப்பணித்துறையில் பதிவு செய்த கட்டிட ஒப்பந்ததாரர் வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் உள்ளவர்கள் உடன் அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதியின் கட்டிட மேற்பார்வைக்கான சம்மத கடிதம் / அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி உடன் பொதுப்பணித்துறையில் பதிவு செய்த பொறியாளரின் கட்டிட மேற்பார்வைக்கான சம்மதக் கடிதம் உள்ளவர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 04-01-2023 மாலை 3.00 மணிவரை செயல் அலுவலரால் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை திருக்கோயில் அலுவலக வேலை நாட்களில், வேலைநேரத்தில் 03-01-2023 அன்று மாலை 5.45 வரை பெற்றுக்கொள்ளலாம். மேற்படி ஒப்பந்தப்புள்ளித்திறப்பு வருகின்ற 04-01-2023 மாலை 3.30 மணிக்கு இவ்வலுவலகத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் (அ) ஒப்பந்ததாரர் முகவர்கள் முன்னிலையில் திருக்கோயில் அலுவலகத்தில் செயல்அலுவலரால் திறக்கப்படும். இதர நிபந்தனைகள் மற்றும் விவரங்களை பெற திருக்கோயில் அலுவலகத்தை அணுகலாம்.

| வ. எண் | வேலை விவரம் | ஒப்பந்த தொகை தோராயமாக ரூ | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி ஆவணவிலை மற்றும் விற்பனை வரி ரூ | ஒப்பந்தக்காரரின் தகுதி | வேலை முடிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | அம்பாள் சன்னதி மற்றும் ஆர்.சி.சி சுற்று மண்டபம் கட்டுதல் பணி | 87,00,000/- | 54,000/- | 17700/- (15000+GST18%) (15000+2700) | பொதுப்பணித்துறையில் பதிவு செய்த கட்டிட ஒப்பந்ததாரர் வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் உள்ளவர்கள் உடன் அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதியின் கட்டிட மேற்பார்வைக்கான சம்மத கடிதம் / அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி உடன் பொதுப்பணித்துறையில் பதிவு செய்த பொறியாளரின் கட்டிட மேற்பார்வைக்கான சம்மதக் கடிதம் | 10 மாதங்கள் |

ஒப்பந்தபுள்ளி அளிக்கும் ஒப்பந்ததாரர்கள் கீழ்க்காணும் சான்றிதழ்களை கண்டிப்பாக இணைக்க வேண்டும். இணைப்பு இல்லா ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கப்படும்.

1. ஒப்பந்ததாரர் பதிவு 2. ஒப்பந்ததாரர் பதிவு நடப்பு 3. விற்பனை வரி நிலுவையின்மை 4. வருமான வரி நிலுவையின்மை 5. Experience Certificate

செ.ம.தொ.இ./ 5354 /ஒப்பந்தப்புள்ளி/2022 " சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" — செயல் அலுவலர்